

கழகத் தலைவர் முன்னிலையில் சமீபத்தில் கழகத்தின் இணைந்த அ.ம.மு.க. பொதுச்செயலாளர் ஆர்.ரெங்கசாமி தலைமையில் அமமுக மாநில ஜெ.பேரவை இணைச்செயலாளர் குருமூர்த்தி, மாவட்ட பொருளாளர் ஜெயக்குமார், கும்பகோணம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் சிவக்குமார், மாவட்ட இளைஞரணி தலைவர் முரளி, மாவட்ட மகளிரணி செயலாளர் ஆனந்தி,உமா உள்பட 31 மாவட்ட, ஒன்றிய, பேரூர், நகர நிர்வாகிகள் மற்றும் 80க்கும் மேற்பட்ட அ.ம.மு.க.வினர் அக்கட்சியில் இருந்து விலகி, தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். இதில் மாநகர செயலாளரும் சு.ப.தமிழழகன், ஒன்றிய செயலாளர்கள் டி.கணேசன், தியாக.சுரேஷ், ஜெ.சுதாகர் மற்றும் பம்பபடையூர் பாலமுருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



பொள்ளாச்சி தொகுதி காட்டம்பட்டிபுதூர் கிராமத்தில் அருந்ததியர் சமுதாய மக்களிடத்தில் நேற்று முன்தினம் தி.மு.க. கூட்டணி கட்சி பொள்ளாச்சி தொகுதி வெற்றி வேட்பாளர் நித்தியானந்தனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் கழக மாநில ஆதி திராவிடர் நலக்குழு இணைச் செயலாளரும்,தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவருமான திப்பம்பட்டி வெ. ஆறுச்சாமி திண்ணை பிரச்சாரம் மேற்கொண்டு வாக்கு சேகரித்தார்.இந்நிகழ்ச்சியில் காட்டம்பட்டி கிளை கழக செயலாளர் ரமேஷ், கிணத்துக்கடவு வடக்கு ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர் விவேகானந்தன், முன்னாள் வார்டு உறுப்பினர் கேபிள் சக்தி,ஜக்கார்பாளையம் கிளை கழக செயலாளர் காளிமுத்து ,காட்டம்பட்டி கழக நிர்வாகிகள் முருகேசன், மயில்சாமி , ஜக்கார்பாளையம் கிளை இளைஞரணி அமைப்பாளர்கள் ஸ்ரீதரன், தினகரன் மற்றும் ஊர் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் தொகுதி வேட்பாளராக டாக்டர் எஸ்.டி.ஜெயலெட்சுமி அறிவிப்பு!

# கழகத்தினர் இனிப்பு வழங்கி கொண்டாட்டம்!

### மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் - கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்!

பெரம்பலூர், மார்ச் 30-

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2026, சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிட பெரம்பலூர் தொகுதி வேட்பாளராக டாக்டர் எஸ்.டி.ஜெய லெட்சுமி யை அறிவிக்கப்பட்டதை முன்னிட்டு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் தி.மு.க. வினர் வெடி வெடித்து, இனிப்பு வழங்கி கொண்டாடினார்கள்.

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் , மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், அரசு குற்றவியல் வழக்கறிஞர் ப.செந்தில்நாதன், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கவியரசு, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் நெ.அருண்குமார், வழக்கறிஞர்கள் சுரேஷ்குமார், மதுபாலன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பா ளர் எம்.மணிவாசகம், நகர் மன்ற உறுப்பினர் ஜெய சித்ரா மணிவாசகம், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் எஸ்.செல்வக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் தொகுதி பெண்களுக்கு ஒதுக்கப்பட்டதற்கு நன்றி தெரிவித்து கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி.அவர்க ளுக்கும் தி.மு.க. வினர் நன்றி தெரிவித்தனர்.

### வருகின்ற சட்டமன்றத் தேர்தலில்

# தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு ஒருமித்த ஆதரவு!

### ஐக்கிய முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் மாநில செயற்குழுக் கூட்டத்தில் முடிவு!

திண்டுக்கல், மார்ச் 30-

வருகின்ற சட்டமன்ற தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணிக்கு ஒருமித்த ஆதரவு வழங்க ஐக்கிய முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் திண்டுக்கல்லில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஐக்கிய முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் தலைமை செயற்குழு கழகத்தின் தலைவராகிய ஹைதர் அலி தலைமையில் திண்டுக்கல் நகர் பேகம்பூரில் உள்ள மதினா பேலஸ் மண்டபத்தில் தலைமை செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் மாநில பொதுச்செயலாளர் திருப்பூர் ஹாலிதீன், மாநில துணைத்தலைவர் முசாகிதீன், மாநில துணைப் பொதுச் செயலாளர் மஞ்சக்குடி பாபு, மாநிலச் செயலாளர்கள் அதிரை அகமது ஹாஜா, திண்டுக்கல் ஜமால் முகமது, மதுரை சிக்கந்தர், அப்துல் ஹாலிக், காஞ்சி ஹைதர் அலி, புழல் பசீர், பொறியாளர் பக்ருதீன் ஆகியோர் முன்னிலையில் வகித்தனர். இதில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

#### திமுக தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவு

சமூகநீதி மண்ணான தமிழ்நாட்டில் நிலவி வரும் சமூக மற்றும் சமய நல்லிணக்கத்திற்கு ஊறு ஏற்படாமல் பாதுகாத்திடவும், பிரிவினைவாதிகளுக்கு உரிய பாடம் புகட்டிடும் வகையில், நடைபெற இருக்கின்ற 2026 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில், மதசார்பற்ற கூட்டணியான திமுக தலைமையில் அமைக்கப்பட்டுள்ள அணிக்கு ஐக்கிய முஸ்லிம் முன்னேற்றக் கழகம் தனது முழுமையான ஆதரவைத் தருவது என்று இக்கூட்டம் ஏகமனதாக முடிவு செய்கிறது.

மக்களிடையே மதங்களால் பிரிவினையை ஏற்படுத்தித் தமிழ்நாட்டிலும், வடமாநிலங்கள் போன்று சமூக நல்லிணக்கத்தை சிதைத்துவிட வேண்டும் எனும் தீய எண்ணத்துடன் செயல்படும் பாசிசக் கூட்டம் பல்வேறு வடிவங்களில் தமிழக அரசியல் களத்தில் வலம் வருகின்றனர். இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் இதுவரை வாக்களித்து வந்த தமிழ்நாட்டு மக்களாகிய நாம் அனைவரும், இந்த முறையும் அதீத விழிப்புணர்வுடன் வாக்களித்து பிரிவினைவாதிகளையும், அவர்களுக்குத் துணை நிற்பவர்கள் எந்த வடிவத்தில் வந்தாலும், இந்த மண்ணை விட்டு வேரோடும், வேரடி மண்ணோடும் விரட்டியடிக்கும் வகையில் வாக்களிக்க வேண்டும் என ஐக்கிய முஸ்லிம் முன்னேற்றக் கழகம் அனைவரையும் கோருகிறது.

### ஓயா உழைப்பாளி முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி தொடரட்டும்!

# முதல்வரின் சாதனைகளை வீடு வீடாக எடுத்துக் கூறி வெற்றி காண்போம்!

### நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் அறிக்கை!

சென்னை, மார்ச் 29–

தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒய்வின்றி உழைத்து வருகிறார். முதல்வரின் சாதனைகளை வீடு வீடாக எடுத்துக் கூறி திராவிட மாடல் ஆட்சி தொடர வெற்றிக் கனியை முதல்வரிடம் சமர்ப்பிப்போம் என நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள் ளார்.

அவரது அறிக்கை வருமாறு:–

நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் நாம் அனைவரும் சமம் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கப் பெற்று வேற்றுமைகள் கலைந்து அனைவரின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதே நமது அரசின் நோக்கம் என்றும் நீதி நிலை நாட்டப் பட வேண்டும் என்பதே இந்த ஆட்சி ஒரு சாட்சி.

வன்மம் மனதில் வைத்துக் கொண்டு தொடர்ந்து கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் நடத்திக் கொண்டு வருகிறார் மதபோதகர் பால் தினகரன் நடத்திய கூட்டத்தில் ஆர்எஸ்எஸ் இயக்கம் பல பிரிவுகளில் வழக்குகள் தொடர்ந்து கிறிஸ்துமஸ் அன்று கூட கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். ஒன்றிய அரசு மற்றும் கூட்டணி நண்பர்களின் பொய்யான முகத்தை இந்தத் தேர்தல் தோல் உரித்து காட்டும். விடுமுறை எடுக்காமல் சேயை செய்திருக்கிறார் என்று உண்மைக்கு மாறாக பேசி ஏமாற்றி வருகிறார்கள்.

எதிர்க்கட்சிகளின் விவாதத்திற்கு பதில் சொல்ல வேண்டும் என்று பயந்து பாராளுமன்றத்திற்கு வராத ஒரு பிரதமரை கொண்டிருக்கிறது நம் நாடு. மோடி தியாகத்தின் அடையாளம் என்று பொய் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

நமது முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் ஓய்வு என்பதே அறியாமல் மக்கள் நலன் கருதி உழைத்து வருகிறார். உழைப்பு உழைப்பு என்று ஒன்று தான் நமது முதலமைச்சர் அறிந்ததே!! எடப்பாடி பழனிசாமி சாத்தான்குளம் கொலை வழக்கில் கூட அடித்துக் கொல்லப்பட்டவர்களை மாரடைப்பு என்றும் மூச்சுத் திணறலில் இறந்தனர் என்றும் பொய் பேசி மக்களை திசை திருப்பினார்.

நமது முதலமைச்சர் வலியுறுத்தியதனால் 07.07.2020 சி.பி.சி.ஐ.டி. யிலிருந்து வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றி இன்று நீதி வென்றது. பொய்யர்களின் ஆட்டத்தை மக்கள் தன் வாக்குகள் மூலம் அடக்குவார்கள். தி.மு.க.வை வீழ்த்த வேண்டும் என்று நினைப்பவர்கள் வீழ்வார்கள். இது சரித்திர வெற்றி. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிறிஸ்தவர்க ளும், முஸ்லிம்களும் பி.ஜே.பி., அ.தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்பது உறுதி.

முதலமைச்சர் செய்த அனைத்து சாதனைகளையும் கூறி பட்டி தொட்டி



எங்கும் பிரச்சாரம் மேற்கொண்டு நமது திராவிட இயக்கம் சார்பில் வெற்றிக்கனியை முதலமைச்சரிடம் சமர்ப்பிப்போம்.

இவ்வாறு திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### எழும்பூர் தொகுதி - பகுதிக் கழகக் கூட்டம்!

சென்னை,மார்ச்30–

சென்னை கிழக்கு மாவட்டம் கொளத்தூர், துறைமுகம், எழும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதி கழக செயலாளர்கள் வட்டக் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள் இரா. விடுதலை, இரா.நரேந்திரன், பி. எம்.யாழினி, பகுதிக் கழக செயலாளர்கள் ஐ.சி.எப். வ.முரளிதரன், எ. நாகராஜன், எஸ்.ராஜசேகர், எஸ். முரளி, சொ.வேலு எம்.சி., வி.சுதாகர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### வில்லியனூரில் இரா.சிவா வாக்குச் சேகரிப்பு!

புதுச்சேரி, மார்ச் 30-

வில்லியனூர் தொகுதியில் கடந்த ஐந்து ஆண்டுகளாக தாம் செய்த சாதனைகளை எடுத்துக் கூறி ஒதியம்பட்டு கிராம மக்களிடையே எதிர்க்கட்சித் தலைவரும், திமுக வேட்பாளருமான இரா.சிவா வாக்குகள் சேகரித்தார்.

புதுச்சேரி மாநிலம் வில்லியனூர் சட்டமன்றத் தொகுதியில் மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் இரா. சிவா நேற்று காலை ஒதியம்பட்டு வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட ஒதியம்பட்டு, அன்பு நகர், பள்ளிக்கூட வீதி, மேட்டுத் தெரு, அண்ணா நகர், மாரியம்மன் கோவில் வீதி, திருமால் நகர், பழநியப்பா நகர், கோட்ரஸ், கே.வி. நகர், கண்ணதாசன் நகர், குறவன் குடிசை ஆகிய பகுதிகளில் வீடு, வீடாகச் சென்று ஐந்தாண்டுகளில் ஒதியம்பட்டு கிராம வளர்ச்சிக்கு தாம் செய்த பல்வேறு திட்டங்களை எடுத்துக்கூறியும், துண்டு பிரசுரம் வழங்கியும் வாக்கு சேகறித்தார். அப்போது மக்கள் மக்களுக்காக ஓடோடி உழைக்கும் உங்களுக்குத் தான் எங்கள் ஆதரவும், வாக்கும் என்று கூறி மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

முன்னதாக நேற்று மதியம் வில்லியனூர் தொகுதிக்கு உட்பட்ட சுல்தான் பேட் முஹம்மதியா பள்ளி வாசலில் தொழுகை முடிந்து வந்த இஸ்லாமியர்களை சந்தித்து ஆதரவு திரட்டினார்.

வாக்குச் சேகரிப்பின் போது வில்லியனூர் தொகுதி தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வாணியம்பாடி **வீ. சிவாஜிகணேசன்**

மார்ச் 30 (2015)



வேலூர் மாவட்டம், வாணியம்பாடி நகரக் கழகச் செயலாளராக 25 ஆண்டுகள் தொடர்ந்து கழகப் பணியாற்றியவர்.

வாணியம்பாடி நகர்மன்ற உறுப்பினராக 10 ஆண்டுகளும்; வாணியம்பாடி நகர்மன்ற தலைவராக ஒரு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்நகர மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி துணைத் தலைவராகவும், வாணியம்பாடி நகர கூட்டுறவு வங்கித் தலைவராகவும், தென்னக ரயில்வே துறை ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



## 8-ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 27.02.1984

மறைவு : 30.03.2018

திருமதி. **ர.கனிமொழி** M.Sc.,M.Phil.,

வானத்தில் நிலவாய்... வையகத்தில் தென்றலாய்...
எங்கள் இதயத்தில் என்றென்றும் வாழும் உனக்கு
எங்களது இதய அஞ்சலி

பெற்றோர் : **ப.கோவிந்தராசன்** M.A.,
கீழ்வேளூர் ஒன்றிய கழக செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினர்
**வசந்தி கோவிந்தராசன்**

மற்றும் குடும்பத்தினர்கள், நண்பர்கள்
இராதாமங்கலம், கீழ்வேளூர் ஒன்றியம், நாகப்பட்டினம் மாவட்டம்